பதற்கு பகிரங்கமாக ஒரு விசாரணைக் கமிஷனையே அரசு அமைக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அமைத்தால் கொத்தடிமை முறை ஒழியும், பல்லாயிரக்கணக்கான ஏழைகளுக்கு வாழ்வு கிடைக்கும்.

அடுத்து, மதுவிலக்கு சற்று தளர்த்தப்பட்டுள்ளது. மது விலக்கினை கடுமையாக அமல்நடத்தியபோது எதிர்க்கட்சிகளை ஒடுக்க கடுமையான சட்டம் என்று அன்றைக்கு சொன்னார்கள். ஆனால், இன்று தாய் மீது இட்ட ஆணை என்ன ஆயிற்று என்று கேட்கிறார்கள். தமிழகத்திலே இருக்கின்ற தாய்மார்களுக்கெல்லாம் தாய் புரட்சித் தலைவரே. ஆகவே, புரட்சித் தலைவர அவர்கள் மதுவிலக்கினைத் தளர்த்தினாலும், தாய் மிதித்து குஞ்சு பாதிக்கப்படுவதில்லை. ஆகவே, மதுவிலக்கினைத் தளர்த்தியுள்ளார்களே தவிர மது விலக்குக் கொள்கையைப் பொறுத்த மட்டில் அது அப்படியேதான் இருக்கின்றது. ஆனால் மதுவிலக்கினைத் தளர்த்துவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? தமிழக மக்களைக் குடிப் பழக்கத்திற்கு ஆளாக்கியவர்கள் யார்? என்பது பற்றியெல்லாம் சதாசிவம் கமிட்டியின் அறிக்கை சொல்லிக்கொண்டிருக்கிறது.

[முற்பகல் 11-40]

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(ஆ) மாற்றுத் தலைவர் பட்டியல்-உறுப்பினர் நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் விதி 9 (1)-ன்கீழ் திரு. ஜே. சி. டி. பிரபாகரன் அவர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர் பட்டியலில் ஒருவராக நியமிக்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம் 1981-82—பொது விவாதம் (தொடர்ச்சி).

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களால் பொறுப்பு மாற்றப்பட்டிருக்கும் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது காந்தி-காமராஜ் தேசிய காங்கிரசினுடைய கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்வதற்கு, உங்கள் முன்னால் எழுந்து நின்று கொண்டிருக்கிறேன்.

நமது நிதியமைச்சர் அவர்கள், தன்னுடைய நிதிநிலை அறிக்கையினை அலுவலாளர்கள், அதிகாரிகளுடைய துணையுடனும், அவர்களுடைய ஆழ்ந்த அகன்ற அனுபவத்தின் உதவியுடனும், நாட்டு மக்களுக்கு நலம் பயக்கின்ற வகையிலே தீட்டிட வேண்டும் என்று பெரும்பாடு பட்டிருக்கிறார்கள் என்பதை, இந்த நிதி நிலை அறிக்கையிலே வருகிற ஒவ்வொரு வரியும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது.